**திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்**
**பத்திரிக்கைச் செய்தி**

தமிழ்நாடு அரசு, திருப்பூர் மாவட்ட சமூகநலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும், திருப்பூர் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாக உள்ள களப்பணியாளர், காவலர் மற்றும் பல்நோக்கு உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு தலா ஒரு பணியிடம் காலியாக உள்ளது. மையத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பபடிவத்தினை https://tiruppur.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட சமூகநல அலுவலர், அறை எண்.35,36 தரைதளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் என்ற முகவரிக்கு வரும் 05.11.2026 மாலை 5.00 பி.ப மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்களால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**காலிப்பணியிடங்களின் விவரம்**

| **வ. எண்** | **பதவியின் பெயர்/ தொகுப்பூதியம்** | **பணியிடங்களின் எண்ணிக்கை** | **கல்வி தகுதி** | **இதர தகுதிகள்** |
|---|---|---|---|---|
| 1 | களப்பணியாளர் (Case Worker)<br><br>(மாதம் ரூ.18,800/- தொகுப்பூதியம்) | 1 (ஒன்று) | சமூகப்பணி / சட்டம் / உளவியல் / சமூகவியல் /சமூக அறிவியல் சமூகப்பணி தொடர்புடைய துறைகளில் இளங்கலை/ முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். *Master/Bachelor degree of Social Work / Law/ Psychology/ Sociology/ Social Science* | 1. திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாராகவும், மூன்று ஆண்டுகள் தொண்டு நிறுவனங்கள் அரசு சார்ந்த திட்டங்களில் பணிபுரிந்தவர்களாகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஆலோசனை வழங்குவதில் 1 வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. சுழற்சி முறையில் (24/7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும். |
| 2 | காவலர் (Security)<br><br>(மாதம் ரூ.12,000/- தொகுப்பூதியம்) | 1 (ஒன்று) | | 1.. திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாராக இருத்தல் வேண்டும்.<br>2. சுழற்சி முறையில் (24/7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>3. காவலராக பணிபுரிந்த அனுபவம். |
| 3 | பல்நோக்கு உதவியாளர் (Multi Purpose Worker)<br><br>(மாதம் ரூ.10,000/- தொகுப்பூதியம்) | 1 (ஒன்று) | | 1. அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br>2.விண்ணப்பதார்ருக்கு சமையல் தெரிந்திருக்க வேண்டும்.<br>3. திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாராக இருத்தல் வேண்டும்.<br>4. சுழற்சி முறையில் (24/7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும். |